சார்பு நீதிமன்றம், முதுகுளத்தூர்

மோ.வா.வி.நம.எண்.4/2023

**2024ம் ஆண்டு ஜூன் திங்கள் 20ம் நாள் மனுதாரர் தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1944ம் ஆண்டின் உறுதிமொழி சட்டத்தின்படி திரு.த.ராஜகுமார், எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதியாகிய என்னால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.**

பெயர் : திரு. வீரபத்திரன் தாலுகா : கடலாடி

த/பெ :திரு.மாடசாமி ஊர் : காவாக்குளம்

வயது : 72

வேலை : விவசாயம் மற்றும் செங்கல்தொழில்

**20.06.2024**

ம.சா. : **1**

<u>முதல் விசாரணை</u>

**நான் இந்த மனுவில் மனுதாரர். ம.சா.1 ஆக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.**

**1). முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1– உண்மை நகல்**

**2). விடுவிப்புக்குறிப்பு அசல் ம.சா.ஆ.2**

**3). என்னுடைய ஆதார் அடையாள அட்டை – அசலோடு ஒப்பிட்டு பார்க்கப்பட்ட ஒளி நகல் ம.சா.ஆ.3**

**4). நான் பயணித்த வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஒளி நகல் ம.சா.ஆ.4**

**5). 2ம் எதிர்மனுதாரர் பயணித்த வாகனத்தின் பதிவுச்சான்று ஒளி நகல் ம.சா.ஆ.5**

**6). எனக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு நகல் ஒளி நகல் ம.சா.ஆ.6**

**7). எனக்கு வழங்கப்பட்ட காயச்சான்று நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7**

**8). பார்வை மகசர் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.8**

**9). வரைபடம் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.9**

**10). மோட்டார் வாகன ஆய்வறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.10**

11). டிஎன்65 ஏஒய் 2172 வாகனத்தின் பதிவுச்சான்று ஒளி நகல் ம.சா.ஆ.11

12). மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஒளி நகல் ம.சா.ஆ.12

13). குற்ற இறுதி அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.13

14). பயணத்தாள்கள் ம.சா.ஆ.14 9 எண்ணம் அசல் ம.சா.ஆ.14

15). மருத்துவ பில்கள் ம.சா.ஆ.15

16). பி.சி.ஜி அறிக்கை ம.சா.ஆ.16

17). மருத்துவ பில்கள் ம.சா.ஆ.17

18). வருமான வரி தாக்கல் செய்ததற்கான படிவங்கள் ஒளி நகல் ம.சா.ஆ.18

19) .என் பெயரிலான பட்டாக்கள் ம.சா.ஆ.19

20). மருத்துவ பில்கள் ம.சா.ஆ.20

21). மருத்துவ பில்கள் ம.சா.ஆ.21

22). மருந்து சீட்டுகள் ம.சா.ஆ.22

23). நுண்கதிர் படங்கள் ம.சா.ஆ.23 6 எண்ணம்

24). தகவின்மை சான்று நீ.ம.சா.ஆ.1

மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தானது எப்போது எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் 03.11.2022ம் தேதி காலை 8 மணிக்கு நடந்தது. டிஎன்65 ஏஒய்9857 என்ற டிராக்டர் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் காப்புச்சான்று இல்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி வாகனத்திற்கு 03.11.2022ம் தேதி மதியம் 01.51 மணியிலிருந்து நடு இரவு 2.11.2023ம் தேதி வரையில்தான் பாலிசி வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி விபத்து நடந்த நேரத்தில் 2ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனமானது 3ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்படவில்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் எனக்கு எவ்வித நஷ்ட ஈட்டுத்தொகையையும் கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.